மொறட்டுவ மாநகர சபை - 2023

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொறட்டுவ மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறட்டுவ மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொறட்டுவை மாநகர சபையினால் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளைப் பேணிச் செல்வதற்காக மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் LGD/09/2019 மற்றும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதிய | சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி 2023 இன் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட படிவம் மற்றும் குறியீட்டு இலக்கங்கள் எதுவும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலும் கணக்கீட்டு நியமத்தின் பந்தி இலக்கம் 03 மற்றும் மேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கணக்குகள் தொடர்பான விதி இலக்கம் 84 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நியத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை கணக்கீட்டு கொள்கை கூற்றின் 2.1 இன் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் நியமத்தின் பந்தி இலக்கம் 06 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல், சொத்துக்கள் பெறுமானத் தேய்வு மற்றும் ஆண்டின் மூலதன மாணியம் வருமானத்தில் இனங்கண்டு அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான மிகையில் நிலையான வைப்பு வட்டி சீராக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்கு பெறுமானத் தேய்வுகளுக்குரிய ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் பெறுமானத் தேய்வு மாத்திரம் சீராக்கப்படாதிருந்ததையும் மற்றும் அதனால் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் சரியான தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.28 இன் பிரகாரம் நிலையான வைப்பு வட்டி வருமானமாக ரூபா 8,301,300 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 7,373,286 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | இந்த வழுக்களை ஏற்றுக்கொள்வதுடன் அவற்றை 2024 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.29 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிலையான வைப்பு பெறுமதி | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சீராக்கப்படாதிருந்ததுடன் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 19,800,313 ஆக இருந்த போதிலும் ரூபா 26,195,386 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் கணக்கின் மீதி அதற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 3,143,089 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் தகவல்களை கண்டறிதலின் அடிப்படையில் சரி செய்வதன் கீழ் இந்த வேறுபாடு நிலையாக பேணிச்சென்று நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி இணக்கமாக ஊழியர் கடன் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடு, காலப்பகுப்பாய்வு, விரிவான பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பௌதீக இருப்பு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 94,942,794 ஆன 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிலுவை மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் நிலுவைப் பதிவேட்டை பரீட்சிக்க முடியும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (அ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | இழப்புபொன்று ஏற்பட்டு 07 நாட்களுக்கு மேலதிகமாக இருக்குமாயின் ஆரம்ப அறிக்கையும் இழப்பு ஏற்பட்டு 03 மாதங்கள் கழிவதற்கு முன்னர் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய 07 வாகன விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 156 | 2003 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை மற்றும் பங்களிப்புப் பணம் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் ரூபா 1,549,200 மிகைக் கட்டணம் செலுத்தும் பொறுப்பொன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் அந்தப் பணத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் தொடர்பாக விரிவான அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுளதுடன் இறுதித் தீர்மானம் ஒன்று குழு எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனைகளை விரைவாகப் பூர்த்தி செய்து பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 156 | திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் போது 2018 யூலை 20 ஆம் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டுப் பணம் மற்றும் வழக்குக் கட்டணமாக சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 11,602,318 தொகையினை அதற்குப் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயங்களுக்குரிய பரிசோதனை நடவடிக்கைகளுக்காக விசாரணை சபையொன்று உள்ளூராட்சித் திணைக்களம் (மே.மா) இனால் நியமிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயங்கள் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளின் பரிசோதனைக் கட்டத்தில் காணப்படுகின்றது. | -மேற்படி- |
| (iv) | நிதிப்பிரமாணம் 189 | 1998 முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பெறுமதி ரூபா 491,288 ஆன 86 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படுவதாக அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7.2 போதியளவான அதிகாரப் பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 188(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபை நிதியத்தை பயன்படுத்த முடியாத வகையில் கொடுக்கல் வாங்கல்களின் ஒன்றான சபையின் 27 உறுப்பினர்களுக்காக திடீர் விபத்து மற்றும் சுகாதார காப்புறுதிகளுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 953,715 மற்றும் 1,086,807 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,040,522 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,703,022 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது உரிய தொகையிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. நகர செயலாளரினால் விநியோகிக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் அறியத்தருகின்றோம். | சபைக்கு அறிவட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,100,827 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 90,675,820 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 213,519,600 | 211,280,756 | 142,594,779 | 300,320,232 | 213,357,880 | 206,930,699 | 261,364,133 | 293,898,809 |
| (ii) | வாடகை | 10,090,400 | 13,969,315 | 11,958,248 | 2,011,064 | 5,524,400 | 10,448,312 | 6,316,645 | 4,357,667 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 9,000,000 | 6,861,100 | 6,790,275 | 70,825 | 6,500,000 | 9,462,600 | 9,503,875 | 2,933,175 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,500,000 | 6,087,002 | 6,087,002 | - | 594,000 | 669,763 | 647,957 | 678,305 |
| | மொத்தம் | 234,110,000 | 238,198,173 | 167,430,304 | 302,402,121 | 225,976,280 | 227,511,374 | 277,832,610 | 301,867,956 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி | ரூபா 50,000 தொகையினை விட நிலுவையாகக் காணப்படுகின்ற ஆதனங்களின் எண்ணிக்கை 2023.09.30 ஆந் திகதியில் ஒப்பிடும் | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வரி மீதி ரூபா 300,320,232 ஆக இருந்ததுடன் ரூபா 50,000 இனை விஞ்சிய 406 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 99,053,321 ஆகும். | போது 431 இல் இருந்து 406 வரை குறைவடைந்துள்ளதுடன் அந்த ஆதனங்களுக்குரிய நிலுவையான ரூபா 105,048,972.00 முதல் ரூபா 99,053,321.00 வரை குறைத்துக் கொள்வதற்கான இயலுமை காணப்பட்டது. | |
| (ஆ) | 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 293,898,809 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 73,939,630 அதாவது 25 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 219,959,179 அதாவது 75 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நடமாடும் சேவை மூலம் ஆதனவரி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | அரசாங்கத்தின் 264 நிறுவனங்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரியாக ரூபா 43,116,235 அறவிட வேண்டிக் காணப்பட்டது. | உரிய அரசாங்க நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு நிலுவைப்பணத்தை அறவிடும் மிகுதி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | சபை அதிகார பிரதேசத்தில் இலகுவான கழிவுப்பொருட்களை சேகரிப்பதற்காக கட்டணம் செலுத்தாத நிறுவனங்களிலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரியதாக அறவிடவேண்டிய ரூபா 56,514,058 கட்டணம் உபவிதிகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலகுவான கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக அறவிட வேண்டிய கழிவுப்பொருள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பாணந்துறை பிரதேச சபையின் கழிவுகள் கரதியான கழிவுப்பொருள் தளத்திற்கு கொண்டு செல்வதற்காக 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அந்த சபையிலிருந்து கிடைக்க வேண்டிய (வரியுடன்) ரூபா 1,297,188 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேல் மாகாண சபையின் தலைமையில் இதற்காக தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 254 (அ) 1 மற்றும் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு வாடகை அறவிட வேண்டிய போதிலும் நீண்ட கால வாடகைக்கு வழங்கப்பட்ட 179 ஆதனங்களிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை மீதி ரூபா 5,303,156 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நீண்டகாலமாக வாடகைக்கு வழங்கப்படுகின்ற ஆதனங்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 தவணைகளுக்கு மேற்பட்ட நிலுவை ஆதனங்களின் எண்ணிக்கை 50 இலிருந்து ரூபா 3,616,450 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,874,293 கூட்டுத்தொகையான பெறவேண்டிய வருமான மீதிகள் 06 இனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 2.2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கடந்த ஆண்டில் விதிக்கப்பட்ட 02 மிகைக் கட்டணங்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 760,173 அறவிடப்பட்டிருக்கவில்லை. | முத்திரைப் படிகளுக்கு உரிய அந்த கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பதிற்கடமை சம்பளங்களுக்குரிய மொறட்டுவ நகரசபையின் முன்னாள் தலைவர், முன்னாள் உப தலைவர், முன்னாள் செயலாளர் மற்றும் முன்னாள் பதிற்கடமை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் மரணமடைந்திருந்தமையால் அது தொடர்பாக அறிவித்து தேசிய கண்க்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் மற்றும் மிகுதி ரூபா 17,875 தொகையை முன்னாள் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆதனவரிப் பிரிவின் கணனி சேவையில் நியமிக்கப்பட்டிருந்த ஊழியரினால் பதவி நிலை உத்தியோகத்தருக்குச் சொந்தமாகக் காணப்பட வேண்டிய இரகசிய நுழைவுக் குறியீடு (Secret Password) போலியாகப் பயன்படுத்தப்பட்டு பொது நுழைவுக் குறியீடு (Secret Password) பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,893 பெறுமதியான பட்டியல்கள் இரத்துச்செய்யப்பட்டு ஆதனவரி மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் | தகவல்களை உறுதிப்படுத்தி வரைவாக அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நட்டம் அறவிடப்படவில்லை. | | |
| (ஆ) | உறுப்பினர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை எரிபொருள் மீதியான ரூபா 75,000 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 29,688,127 சம்பள மீளளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2019 நவம்பர் 08 ஆம் திகதி நிரந்தரமாக்கப்பட்ட 112 ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தமமையால் வருடாந்தம் செலுத்துகின்ற சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்யப்படவில்லை. | சம்பளத்தை மீளளிப்பு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மார்ச் 18 ஆம் திகதி சபைக்குக் கிடைக்கப்பெற்ற தீயணைப்பு வண்டி 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் 2006 மார்ச் 22 ஆம் திகதி சபைக்குக் கிடைக்கப்பெற்ற தாங்கியுடனான தீயணைப்பு வண்டியும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தீயணைக்கும் வண்டிகளைக் கையேற்பதற்கும் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | லுனாவ விருந்தினர் விடுதி அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான ஹெக்ரேயர் 0.7063 பரப்பளவுடைய காணி அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் (454 ஆவது அதிகாரம்) 06 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் | அரசாங்கத்தின் முன்னுரிமை செயற்திட்டமொன்றாக அறிமுகப்படுத்தி இந்த காணிக்காக இழப்பீட்டுத் தொகையான ரூபா 102 மில்லியன் தொகை அரசாங்கத்தின் | ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து நகர சமூகத்திற்கு வழங்க வேண்டிய சேவைகள் வழங்க வேண்டும். |

| | |
|---|---|
| எந்தவொரு கொடுப்பனவுமின்றி நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு 2021 திசெம்பர் 06 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அதில் மாடிவீட்டுத் தொகுதியொன்று நிர்மாணித்து அந்த வீடுகளை மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. 175 வீடுகளில் மக்கள் நகர அதிகாரப் பிரதேசத்தின் நபர்களாகவும் இந்த வீடுகளுக்காக ஆதனவரி மதிப்பீட்டு இலக்கம் வழங்கப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நகர சமூகத்திற்கு வழங்க வேண்டிய சேவைகள் நகர சபையினால் வழங்கப்படாதிருந்ததுடன் சபைக்கு கிடைக்க வேண்டிய கணிசமான ஆதனவரி வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. | (மதிப்பீட்டுத் தொகை) செலுத்துவதற்கு அமைச்சரவை 02 குறிப்புக்களின் மூலம் தீர்மானித்திருந்த போதிலும் இதுவரை இழப்பீட்டுக் கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்படவில்லை. உரிய ஆதனவரி இலக்கம் விநியோகிப்பதற்கான கோரிக்கையை கையேற்றல், புதிய உரித்து ஆவணப்படுத்துதல் மற்றும் உரித்துத் தொடர்பான சான்றிதழ் / கையளிக்காமைக்கான சான்றிதழ் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை மற்றும் சட்ட ஆலோசனை மேல் மாகாண பிரத செயலகத்தின் சட்ட உத்தியோகத்தரைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பொதுச் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியணியினருக்கு சீருடைப் படிகளாக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 3,515,000 செலுத்தப்பட்டிருக்கும் போது 2023 சனவரி 10 ஆம் திகதி ரூபா 2,289,600 தொகை செலுத்தி தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 2022 யூன் 03 ஆம் திகதி களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்த 864 ரீசேட் மற்றும் 800 அடிப்பகுதிகள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கொள்வனவு செய்வதற்கு சபை தீர்மானம் கணக்காய்விற்கு அவதானிக்கப்படாதிருந்ததுடன் 2024 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் அந்த சீருடை இருப்பை பகிர்ந்தளிக்காமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போதும் ரூபா 3,390,000 தொகை அதற்காக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எஞ்சினைப் பழுது பார்க்காமையினால் 11 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் அந்த வாகனங்கள் நீண்ட காலம் முதல் செயலிழந்து காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | லக்சபத்தி பிரதேசத்தில் சிறுவர் மற்றும் தாய் சேய் நிலைய கட்டிடத்தின் மேல்மாடி விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மொறட்டுவை மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குரிய வீர புரன் அப்பு வாகன தரிப்பிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020 மார்ச் 13 ஆம் திகதி சபைக்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டு 3½ வருடங்கள் கடந்திருந்த போதும் வாகனத் தரிப்பிடம் வாடகைக்கு வழங்கி பிரதேசத்தின் மக்களுக்கு வாகனங்களை நிறுத்தும் வசதிகள் வழங்கி சபைக்கு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட வடக்கு | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மொரட்டுமுல்ல சிறிசாசனவங்ச ஞாபகார்த்த நூலகம் மற்றும் சுகந்திர ஆயர்வேத மருந்தகத்துடன் இரண்டு மாடிக் கட்டிடம் நீண்டகாலம் முதல் பயன்படுத்தப்படாததுடன் அது துரப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. | அங்கீகாரத்தின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கிய பின்னர் முழுமையாக உடைத்து அகற்றி புதிய கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | |
| (உ) | டிக்சன் ஜே பீரீஸ் விளையாட்டு மண்டப கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அதற்கு அடுத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவும் விளைவற்றுக் காணப்பட்டது. | டிக்சன் ஜே பீரீஸ் விளையாட்டரங்கின் விளையாட்டு மண்டபம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதாக அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதனை சபை அகற்றி புதிய கட்டிடம் ஒன்றுக்காக நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | டக்ளஸ் பிரனாந்து விளையாட்டு அரங்கின் பழைய விளையாட்டு மண்டப கட்டிடம் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் புதிய விளையாட்டு மண்டபக்கட்டடம் விளைவற்றுக் காணப்பட்டது. | டக்ளஸ் பிரனாந்து விளையாட்டு அரங்கின் புதிய விளையாட்டுக் கட்டிடம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் முறையான பிரகாரம் நிர்மாணிக்காமையினால் மாநகர சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமையும் பழைய கட்டிடத்தை நவீன மயப்படுத்துதல் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் அனேகமானவர்கள் இப்பிரதேசத்தில் நடமாடுகின்றமையால் அவர்கள் தொடர்ச்சியாக சேதங்களுக்கு உட்படுத்துகின்றமையால் பாதுகாப்புப் பிரிவை ஈடுபடுத்திய பின்னர் நவீனமயமாக்குதல் பொருத்தமானதாகும். | விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | வில்லோராவத்த விளையாட்டு மண்டபக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதில் உடைந்த பொருட்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளது. | வில்லோராவத்த பழைய விளையாட்டு மண்டபம் பல தடவைகளின் போது சுத்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் விளையாட்டு சமூகம் பயன்பாட்டுக்கு எடுக்காமையின் அடிப்படையில் அருகில் உள்ள பிரதேசவாசிகளினால் பல்வேறு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பாதுகாப்புப் பிரிவை ஈடுபடுத்தல் பொருத்தமாக இருந்தமையால் தற்போது நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஏ) | அங்குலான சுடலைக் கூடத்தில் இயந்திரம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதுடன் பழுதுபார்த்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட 05 பேர்களிடமிருந்து ரூபா 238,903 தொகையும், மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 445,578 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 684,481 கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்பாடற்ற கடன் மீதி பதிவேட்டில் உள்ளடக்கி 104 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,565,677 கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்களை ஓட்டத்திற்காக வருமன அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்த போதிலும் சபையின் 20 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 மோட்டார் வாகனங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது வெளி கராஜ் க்கு அனுப்பப்பட்டிருந்த 02 டெக்டர் வண்டிகள் 2024 சனவரி 30 ஆம் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான பெறுகைத்திட்டம் ஒன்று தயாரித்து அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் சபையினால் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 38,835,132 மதிப்பீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்திற்காக விரிவான பெறுகைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையின் 2023 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் மொத்த மூலதன செலவினத்திற்காக ரூபா 195,048,100 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினம் ரூபா 50,124,251 ஆனமையால் நிதியேற்பாட்டின் பயன்பாடு 26 சதவீதம் மாத்திரம் ஆகும். | 2023 ஆம் ஆண்டில் மாநகர சபை கலைக்கப்பட்ட பின்னர் அரசியல் அதிகாரிகளினால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டம் நடைமுறையில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்ப்பு பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |